# மகன் என்ற உரிமையின் ஆசீர்வாதம்

## (8:14-17)

1 யோவான் 3:1ல் யோவான், "நாம் தேவனுடைய பிள்ளைகளென்று[1] அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்" என்று எழுதினார். இவ்வசனப்பகுதி ஆச்சரியம் மற்றும் திகைப்பினால்கூட நிறைந்துள்ளது. இந்த அண்டத்தின் சிருஷ்டிகர் - எல்லாவற்றுக்கும் கர்த்தர் - நமது *பிதாவாக* இருக்கிறார், மற்றும் நாம் அவரது *பிள்ளைகளாக* இருக்கிறோம். "எவ்வளவு பெரிது" என்பது "எந்த நாட்டின்" என்று மூலப்பொருள்பட்ட *potapen* என்ற வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.[2] J. W. ராபர்ட் என்பவர், "நம்மைத் தேவனுடைய பிள்ளைகளாக அனுமதிக்கும் அவரது அன்பு, இந்த உலகத்தில் எந்த ஒரு விஷயத்துடனும் ஒப்பிடப்படுவதை எதிர்த்துநிற்கும் வகையில் மிகவும் பெரியதாகவும் ஆச்சரியம் நிறைந்ததாகவும் உள்ளது" என்று கூறினார்.[3] ஒரு எழுத்தாளர், தேவனுடைய அன்பை "இந்த உலகத்திற்குப் புறம்பான அன்பின் வகை" என்று குறிப்பிட்டார்.[4]

நம்மைத் தமது பிள்ளைகள் என்று அழைப்பதில் தேவனுடைய அன்பின் மாபெரும் தன்மையானது இந்தப் பாடத்திற்கான வசனப்பகுதியில் காணப்பட முடியும்: தேவனுடைய மகன்கள் மற்றும் மகள்கள் என்றிருப்பதன் ஆசீர்வாதமே ரோமர் 8:14-17ன் முதன்மை ஆய்வுக்கருத்தாக உள்ளது. ஜான் R. W. ஸ்டாட் என்பவர் பின்வருமாறு எழுதினார்,

> இந்த நான்கு வசனங்கள் ஒவ்வொன்றிலும் தேவனுடைய மக்கள் அவரது *பிள்ளைகள் அல்லது மகன்கள்* (இது "மகள்கள்" என்பதையும் உள்ளடக்குகிறது) என்று குறிப்பிடப்படுகின்றனர் மற்றும் ஒவ்வொரு வசனத்திலும் இந்த சிலாக்கியமான நிலையானது பரிசுத்த ஆவியானவரின் கிரியையுடன் தொடர்புபடுத்தப்படுகிறது என்பதே இந்தப் பத்தியைப்பற்றி உடனடியாகக் கவனிக்கத்தக்க விஷயமாக உள்ளது.[5]

மகன் என்ற உரிமையின் ஆசீர்வாதங்களைப்பற்றி நாம் படிக்கையில், "நான் தேவனுடைய விசுவாசம் நிறைந்த பிள்ளையாக இருக்கிறேனா?" என்று உங்களையே கேட்டுக்கொள்ளுங்கள்.

# தேவனுடைய பிள்ளைகள் (8:14)

**உரைக்கப்பட்ட ஒரு வாக்குத்தத்தம்**

நமது வசனப்பகுதி, "மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப் படுகிறார்களோ,[6] அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்" என்று தொடங்குகிறது (வசனம் 14). "மேலும்" (*gar*) என்பது 14ம் வசனத்தை அதற்கு முந்திய வசனங்களுடன் பிணைக்கிறது. பவுல், "ஆவியின்படி" நடத்தல் (வசனம் 4), "ஆவிக்குரியவற்றில்" மனதை அமைத்தல் (வசனம் 5), மற்றும் "சரீரத்தின் செய்கைகளை அழித்தல்" (வசனம் 13) ஆகியவற்றைப் பற்றிப் பேசியிருந்தார். இப்போது, அவர் இவ்வாறு வாழ்கிறவர்கள் தேவனுடைய பிள்ளைகளாயிருக் கின்றனர் என்று சுட்டிக்காண்பித்தார்.

**ஆழ்ந்து சிந்திக்கப்பட்ட ஒரு பிரச்சனை**

14ம் வசனம் அடிக்கடி அதன் சந்தர்ப்பப்பொருளிலிருந்து வெளியே எடுக்கப்பட்டு, ஆவியானவராலே *நடத்தப்படுதலின்மீது* மாபெரும் வலியுறுத்தம் தரப்படுகிறது. அது பவுலின் வலியுறுத்தமல்ல. நாம் ஆவியானவராலே *நடத்தப் படுவதற்கு நம்மை அனுமதித்தலின்* அவசியம்மீதே பவுல் கவனம்குவித்தார். NCV வேதாகமம், "எவர்கள் தேவனுடைய ஆவி தங்களை வழிநடத்த அனுமதிக்கிறார்களோ அவர்களே தேவனுடைய உண்மையான பிள்ளைகளா யிருக்கின்றனர்" என்று கூறுகிறது. 14ம் வசனம் ஆவியானவருடைய நடத்து வத்தைப் பார்க்கிலும் அதிகமாக நமது "பின்பற்றுதலை"க் கூறுகிறது. டக்ளஸ் J. மூ என்பவர், " 'ஆவியானவரால் நடத்தப்படுதல்' என்பது 'ஆவியானவரால் தீர்மானிக்கப்பட்ட அடிப்படை இயல்பை உங்கள் வாழ்க்கையில் கொண் டிருத்தல்' என்று அர்த்தப்படுகிறது" என்று எழுதினார்.[7]

இருந்தபோதிலும், மாணவர்கள் அடிக்கடி, "நாம் பரிசுத்த ஆவியானவரால் *எவ்வாறு* வழிநடத்தப்படுகிறோம்?" என்ற கேள்விக்கு நாம் பதில் அளிக்கும்படி வற்புறுத்துகின்றனர். தெய்வீக நடத்துவத்துவமென்பது பவுலினால் அறிமுகப் படுத்தப்பட்ட ஒரு புதிய கருத்தாக இருப்பதில்லை. சங்கீதம் 23ல் உள்ள பின்வரும் பிரபலமான வார்த்தைகளைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்துப்பாருங்கள்: "அவர் … தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார்" (வசனம் 3). நாம் பின்வருவது போன்ற பாடல்களைப் பாடுகிறோம்:

> அவர் என்னை நடத்துகிறார்: ஓ ஆசீர்வாதமான நினைவு!
> பரலோக ஆறுதலின் வார்த்தைகள் அச்சுறுத்தலில் ஆறுதல்தருகின்றன!
> நான் என்ன செய்தாலும், நான் எங்கிருந்தாலும்,
> இன்னும் தேவனுடைய கரம் என்னை நடத்துகிறது.[8]

இருப்பினும் சில காரணங்களுக்காக, *பரிசுத்த ஆவியானவரால்* வழி நடத்தப்படுதல் என்பதற்கு மாறுபட்ட குறிப்புடன் இணைந்தவர்கள் உள்ளனர். அவர்கள் ரகசியமான மென்குரலில் பேசுபவர்களாக, கனவுகளை வெளிப்படுத்துபவர்களாக, சிந்தையைத் திகைக்கச் செய்யும் தரிசனங்கள் கொண்டவர்களாக, எதிர்த்து நிற்க இயலாத தூண்டுதல்கள் உள்ளவர்களாக, மற்றும் மூழ்கடிக்கச் செய்யும் உணர்வுகள் உடையவர்களாக இருக்கின்றனர்.

ஆவியானவரின் வழிநடத்துதலைப் புரிந்துகொள்ள நாம் நமது உணர்வுகளைச் சார்ந்திருந்தால், நாம் யாவருமே வீக்கமுள்ளவர்களாக இருப்போம், ஏனெனில் இதைவிட வேறெதுவும் அதிகமாக அலைபாய்வதோ அல்லது உணர்வுகளைக் காட்டிலும் அதிகமாக வேறெதையும் சார்ந்திருப்பதோ இல்லை. J. D. தாமஸ் என்பவர், ராணுவத்திலிருந்த ஒரு மகன் ஒரு நடவடிக்கையில் கொல்லப் பட்டிருந்ததாக செய்தி கிடைக்கப்பெற்ற ஒரு பெண்ணைப் பற்றிக் கூறினார்.[9] அவள் மிகவும் சீரழிவுக்குள்ளானாள். பின்பு அவள் முதலில் வந்த செய்தி தவறானது என்றும் அவள் மகன் உயிருடன் இருக்கிறார் என்றும் தகவல் கிடைக்கப் பெற்றாள். அவளது சந்தோஷம் எல்லையற்றதாக இருந்தது. கடைசியாக, அவள் இரண்டாவதாகப் பெற்ற செய்தி தவறாக அனுப்பப்பட்டது என்றும் முதலில் பெற்ற செய்தியே சரியானது என்றும் அவளுக்குக் கூறப்பட்டது - அவள் மறுபடியும் பெரும்வருத்தத்தில் மூழ்கினாள். நாம் செய்கிற மற்றும் கூறுகிற விஷயங்களுக்கு நாம் நமது உணர்வுகளைச் சார்ந்திருந்தால், நாம் மணல்மீது கட்டுகிறவர்களாக இருக்கிறோம்.

ஒருவர் தமது உணர்வுகள் ஆவியானவரால் வழிநடத்தப்படுகின்றனவா, ஆவியானவரால் தூண்டப்படுகின்றனவா அல்லது தமது சொந்த சிந்தையின் செயல்முறைகளிலிருந்து விளைகின்றனவா, அல்லது ஒருவேளை பொல்லாங் கனிடத்திலிருந்துகூட வருகின்றனவா என்பதை எவ்வாறு *அறிய முடியும்?* சிலவேளைகளில் பின்வரும் பதில் தரப்படுகிறது: "பரிசுத்த ஆவியானவர் வேதாகமத்திற்கு நேர்மாறான எதையும் செய்யும்படி எவரொருவரையும் ஒருகாலத்திலும் வழிநடத்துவதில்லை." அந்தத் தர்க்கமானது பிரச்சனையின் ஒரு பகுதியை மாத்திரமே கையாளுகிறது. "வழிநடத்துதல்" என்பது தேவனுடைய வசனத்திற்கு நேர்மாறானதாக இருந்தால், அது ஆவியானவரிமிருந்து வருகிற "வழிநடத்துதல் அல்ல" என்பது உறுதி - ஆனால் விசுவாச விஷயத்தில் இல்லாது, கருத்தின் பகுதியில் "வழிநடத்துதல்" என்று அழைக்கப்படுவதைப் பற்றிய விஷயம் என்னவாக உள்ளது? அருட்கொடைக் குழுக்கள், ஒரு உறுப்பினர் "ஆவியானவரால் தாம் வழிநடத்தப்படுவதாக" *கூறுகிறார்* என்பதால் மாத்திரம், அவர்/அவள் "ஆவியானவரால் வழிநடத்தப்படுகிறார்[ள்]" என்று தாமாகவே நம்புவதில்லை என்பதை அறிய போதுமான அளவிற்கு நான் அருட்கொடை பற்றிய விஷயங்களை வாசித்திருக்கிறேன். அருட்கொடைப் பிரசங்கியார் ஒருவர், உறுப்பினரான பெண் ஒருத்தி, அந்தப் பிரசங்கியார் ஒரு குறிப்பிட்ட புத்தகத்தை வாங்கும்படி கூறுமாறு, அவள் "ஆவியானவரால் வழிநடத்தப்"பட்டிருந்ததாக அவரிடத்தில் கூறியது பற்றி எழுதினார். அந்தப் பிரசங்கியார் தமது நூலகத்தில் ஏற்கனவே அந்தப் புத்தகத்தை வைத்திருந்தபடியால், அந்தச் செய்தியைத் தம்மிடத்தில் கூறும்படி அப்பெண் உண்மையிலேயே "ஆவியானவரால் வழி நடத்தப்பட்டிருந்தாளா" என்று சந்தேகப்பட்டார்.

உணர்வுகள் என்பவை நம்பத்தகுந்த *வழிகாட்டியல்ல* என்று நான் மீண்டும் கூறுகிறேன். நாம் ஆவியானவரால் வழிநடத்தப்படுவதற்கு நமது உணர்வுகளை நம்பியிருக்க வேண்டும் என்றால், நாம் என்ன செய்ய வேண்டுமென்று அவர் விரும்புகிறார் என்று நம்மால் ஒருக்காலும் *உறுதிப்படுத்த* இயலாது.

நாம் எவ்வாறு நிச்சயமாயிருக்க முடியும்? வசனத்தை வாசிப்பதினாலேயே, அவர் ஏவியுள்ள எழுதப்பட்ட வசனத்தை வாசிப்பதினாலேயே நிச்சயமா யிருக்க முடியும். வேதாகமத்தை வாசித்து படித்தல் என்பது மாத்திரமே

ஆவியானவர் நம்மிடம் விரும்புகிற மாதிரியாக வாழ்வது எப்படி என்று நம்மால் அறிந்துகொள்ளக்கூடிய *அகஉணர்வுவழியாக* உள்ளதென்பதை நான் மிக அதிகமாக வலியுறுத்த இயலாது/அவசியமில்லை. நான் எவ்வளவுக்கு அதிகமாக வேதாகமத்தை படித்து அதன் ஆணைகளை எனது சிந்தனையின் பகுதியாக்குகிறேனோ, அந்த அளவுக்கு நான் தேவனுடைய இருதயத்தை நெருங்குகிறேன். வசனம் போதிக்கிறவற்றைச் செய்ய நான் எவ்வளவு அதிகமாக முயற்சிக்கிறேனோ, அந்த அளவுக்கு நான் தேவ ஆவியானவரால் வழிநடத்தப்பட்டிருக்கிறேன் என்று அதிக தைரியமாயிருக்க முடியும்.

ஆவியானவர் குறைவான தெளிவுள்ள வழிகளில் நடத்த இயலுமா? பவுல் அடிக்கடி, தேவன் "திறந்திருந்த" வாய்ப்புக்களின் "திறந்த கதவுகள்" அல்லது "வாசல்கள்" பற்றிப் பேசினார் (1 கொரிந்தியர் 16:9; 2 கொரிந்தியர் 2:12; கொலோசெயர் 4:4 ஆகியவற்றைக் காணவும்). எனது வாழ்வில் நான், எனது நேரம் மற்றும் திறன்களைக் கொண்டு நான் என்ன செய்யவேண்டும் என்று தேவன் விரும்புகிறார் என்று சுட்டிக்காண்பிக்கும் "திறந்த வாசல்கள்" - வாய்ப்புகள் பற்றி அறிந்திருக்க முயற்சி செய்திருக்கிறேன். மற்றும், ஆவியானவர் நமது வாழ்வில் செல்வாக்குச் செலுத்தக்கூடிய வழிகளைப் பற்றி நாம் ஆழ்ந்து சிந்திக்கையில், நாம் அனேகமாக, தேவனுடைய சித்தம்பற்றி புரிந்துகொள்ளுதலை, நம்முடைய சுயத்தில் நாம் கொண்டுள்ளதைக் காட்டிலும் பெரிய அளவில் மற்றும் ஆழமான அளவில் கொண்டுள்ள, தேவபக்தியுள்ள நண்பர்களின் ஆலோசனை என்பதையும் உள்ளடக்க வேண்டியதாக இருக்கும் (நீதிமொழிகள் 1:5; 12:15; 13:10 ஆகியவற்றைக் காணவும்).

ஒருவேளை, சாத்தியமான தெய்வீக செல்வாக்குச் செலுத்துதல்கள் பிறவும் பட்டியலிடப்படக்கூடும், ஆனால் வசனம் தவிர வேறு எந்த "வழிநடத்துதலும்" *உணர்வுத் தூண்டுதலாக* உள்ளது என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். வாழ்வில் நமது அனுபவங்கள் விளக்கத்திற்கு உட்பட்டவையாக உள்ளன மற்றும் அவை நமது சுய வற்புறுத்துதல்கள் மற்றும் விருப்பங்கள் ஆகியவற்றினால் வண்ணந் தீட்டப்படுகின்றன. உங்களை நான் இரு வழிகளில் பலமாக எச்சரிக்கிறேன். முதலாவது, தேவனுடைய வசனத்தின் வெளிச்சத்தில் "ஒவ்வொரு விஷயத்தையும் கவனமாக ஆராய்ந்து பாருங்கள்" (1 தெசலோனிக்கேயர் 5:21). இரண்டாவது, நீங்கள் கூறும் அல்லது செய்யும் எந்த விஷயத்திலும் தெய்வீக உதவி அல்லது வழிநடத்துதல் இருப்பதாக உரிமைகோருதல் பற்றி மிக மிகத் தயக்கமாயிருங்கள். சிலவற்றைச் செய்யும்படி தேவன் "என்னிடத்தில் கூறினார்" என்றோ அல்லது ஒரு குறிப்பிட்ட விஷயத்தைச் செய்யும்படி தேவன் "அதை என் இருதயத்தில் இட்டார்" என்றோ உறுதிப்படுத்துவதில், மேட்டிமை நிறைந்த துடுக்குத்தனம் உள்ளது. தேவன் உங்கள் வாழ்வில் கிரியை *செய்வதில்லை* என்று நான் கூறவில்லை[10]; அவர் என்ன செய்துள்ளார் என்று மங்கலான வெளிச்சத்தில்கூடகாண்பதற்குத் தேவையான முற்றிலுமான கவனத்தைக் காலம் மாத்திரமே உங்களுக்குத் தரமுடியும் என்றே நான் கூறுகிறேன். இப்போதிலிருந்து இருபது அல்லது முப்பது ஆண்டுகளுக்குப் பின்பு, நீங்கள் பின்னோக்கித் திரும்பிப்பார்த்து, உங்களுக்கு நடைபெற்ற குறிப்பிட்ட நிகழ்வுகளில் தேவனுடைய கரம் இருந்ததை உங்களால் கண்ணோக்க இயலும். இந்தவேளையில், வசனத்தில் அவரது ஆவியானவரின் வழிநடத்துதலைப் *பின்பற்ற* உங்களால் இயன்ற அளவு மிகச்சிறப்பானதைச் செய்யுங்கள். அதை நீங்கள் செய்தால்,

*தேவன் உங்களுக்குச் "சகலமும் நன்மைக்கேதுவாக நடக்க" காரணமாகிறார் என்று நீங்கள் உறுதியாயிருக்க முடியும் (ரோமர் 8:28).*

**வலியுறுத்தப்பட்ட ஒரு வாக்குத்தத்தம்**

*இருப்பினும், ரோமர் 8:14ல், ஆவியானவரால்* வழிநடத்தப்படுதல் *என்பதல்ல, ஆனால் ஆவியானவரை நாம்* பின்பற்றுதல் *என்பதே பவுலின் முதன்மைக் கவனக்குவிப்பாக இருந்தது என்று நான் திரும்பக் கூறுகிறேன். நாம் ஆவியானவரைப் பின்பற்றினால், நாம் "தேவனுடைய பிள்ளைகளாக" இருக்கிறோம் என்று பவுல் நமக்கு உறுதியளித்தார்! புகழ்பெற்ற பிரபலமானவர் ஒருவருடைய மகனாக இருத்தலைச் சிலர் மன எழுச்சிக்குரிய விஷயமாகக் காண்பார்கள். ஒரு செல்வந்தருடைய மகன்களாக இருத்தல் என்பதைப் பலர் மகிழ்வுடன் அனுபவிப்பார்கள். தேவனுடைய பிள்ளையாக இருத்தல் என்பது மேற்கூறப்பட்டவற்றைவிட மிக அதிகம் மன எழுச்சிக்குரியதாக உள்ளது!*

*"புத்திரர்" என்பதற்கான (huios என்பதன் பன்மை) வார்த்தையானது 14ம் வசனத்தில், ஆண்கள் மற்றும் பெண்களைக் குறிக்கும் வகையில் இனப் பொதுவியல் பாணியில் பயன்படுத்தப்பட்டுள்ளது. 16ம் வசனத்தில், "தேவனுடைய புத்திரர்கள்" என்பதற்குப் பதிலாக "தேவனுடைய பிள்ளைகள் [teknon என்பதன் பன்மைச்சொல்]" என்ற சொற்றொடர் பயன்படுத்தப்பட்டுள்ளது. "தேவனுடைய பிள்ளைகள்" என்ற சொற்றொடர், பிதாவினுடைய மகன்களையும்* மகள்களையும் *உள்ளடக்குகிறது.*[11]

*"நாம் தேவனுடைய மகன்களென்றும் மகள்களென்றும் அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்" (1 யோவான் 3:1)! ஒருமுறை, புகழ்பெற்ற ஒரு பெண்ணின் சிறிய மகளிடத்தில், அவளது தாய்க்குப் பிரியமானவர் யார் என்று கேட்கப்பட்டது. அதற்கு அந்தச்சிறுமி, "அம்மா தானியேலை மிகவும் நேசிக்கிறாள், ஏனென்றால் அவன் மூத்தவனாக இருக்கிறான். அவள் ஜானை மிகவும் நேசிக்கிறாள் ஏனென்றால் அவன் இளையவனாக இருக்கிறான். அவள் என்னை அதிகமாக நேசிக்கிறாள் ஏனென்றால் நான் ஒரே பெண்ணாக இருக்கிறேன்" என்று பதில் கூறினாள்.*[12] *நீங்கள் தேவனுக்கு மகனாக அல்லது மகளாக இருக்கிறீர்களா? அப்படி என்றால் உங்களைத் தேவன் "மிகவும் அதிகமாக அன்புகூருவதை" உங்களால் அறியமுடியும்! அவர் உங்களுக்காக மரிக்கும்படித் தமது குமாரனை அனுப்பியதன்மூலம் அதை நிரூபித்தார்!*

## *சுவிகாரப் பிள்ளைகள் (8:15, 16)*

**சிலாக்கியம்**

*15ம் வசனத்தில் பவுல், தேவனுடைய பிள்ளையாயிருத்தல் எவ்வளவு விசேஷித்ததாக உள்ளது என்பதை வலியுறுத்தத் தொடர்ந்தார்: "அந்தப்படி, திரும்பவும் பயப்படுகிறதற்கு*[13] *நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், 'அப்பா! பிதாவே [pater]!' " என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திரசுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள்.*

*15ம் வசனத்தைப் பொறுத்தமட்டில் வழக்கமாக "Spirit/spirit" கேள்வி உள்ளது. பல மொழிபெயர்ப்புக்களில், இவ்வசனத்தில் இவ்வார்த்தை இரண்டா*

வதாகப் பயன்படும் இடத்தில் பெரிய "S" ஐப் போட்டுள்ளனர் (KJV; NIV மொழி பெயர்ப்புகளைக் காணவும்), மற்றும் சில மொழிபெயர்ப்புகளில் இவ்வார்த்தை பயன்படுத்தப்பட்ட இரு இடங்களிலும் பெரிய "S" போட்டுள்ளனர் (REB வேதாகமத்தில் காணவும்). பெரிய "S" இருமுறை பயன்படுத்தப்பட்டிருந்தால், "நீங்கள் பெற்றுக்கொண்ட ஆவியானவர் உங்களை அடிமைகளாக்கவில்லை, மாறாக, உங்களைப் புத்திரர்கள் ஆக்கியுள்ளார்" என்பது அர்த்தமாக உள்ளது. இரு இடங்களிலும் (NASBயில் உள்ளது போல) சிறிய "s" பயன்படுத்தப்பட்டிருந்தால், "ஆவி" (*pneuma*) என்ற வார்த்தை, "ஒத்துழைப்பின் ஆவி" என்பதில் போன்று, "ஒரு உளச்சார்பு, இயல்பு, அல்லது மனநிலை"[14]யைக் குறிப்பதற்கு ஒரு துணை நிலைக் கருத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது (இந்தப் பயன்பாட்டிற்கான வேதாகம உதாரணம் ஒன்றிற்கு, 2 தீமோத்தேயு 1:7ஐக் காணவும்). பெரிய "S" பயன்படுத்தப்பட்டாலும் சிறிய "s" பயன்படுத்தப்பட்டாலும், செய்தி ஒன்றாகவே உள்ளது: நாம் இரட்சிக்கப்படும்போது, தேவன் நம்மை *அடிமை களாக்கவில்லை,* ஆனால் *புத்திரர்* ஆக்கியுள்ளார்![15] பவுல் கலாத்தியர் 4:7ல் இதைப் பின்வருமாறு விளக்கப்படுத்தினார்: "ஆகையால் இனி நீ அடிமையா யிராமல், புத்திரனாயிருக்கிறாய், நீ புத்திரனேயானால், சுதந்தரனாயுமிருக் கிறாய்."

அடிமைத்தனம் மற்றும் மகன் என்ற உரிமை ஆகியவற்றிற்கு இடையிலான வேறுபாட்டைப் பவுலின் தொடக்ககால வாசகர்கள், நம்மைக்காட்டிலும் சிறப்பான வகையில் புரிந்துகொண்டிருந்தனர். அது கட்டுக்கும் கட்டற்ற நிலைக்கும் இடையிலான வேறுபாடாக, அஞ்சி ஒடுங்குதலுக்கும் தைரியத்திற்கும் இடையிலான வேறுபாடாக, தேவனைத் தண்டிப்பவர் என்று கண்ணோக்கு வதற்கும் அவரைப் பெற்றோராகக் கண்ணோக்குவதற்கும் இடையிலான வேறுபாடாக இருந்தது.[16] அடிமைக்கு அவரது எஜமானருடனான உறவை விளக்கப்படுத்தும் விஷயம் பயம் என்பதாக மாத்திரமே இருக்கும்; ஆனால் "நாம் பயப்படுதலுக்கு வழிநடத்தும் ஆவியைப் பெற்றிருக்கவில்லை" ஆனால் அதற்கு மாறாக நாம், "பிள்ளைகளாக சுவிகரிக்கப்படும் ஆவியைப் பெற்றிருக்கிறோம்" என்று பவுல் கூறினார்! நாம் நமது எஜமானர் நெருங்குகையில் பயந்து நடுங்குகிற அடிமைகளாக இருப்பதில்லை; ஆனால் நமது பிதாவின் பிரசன்னத்தினால் ஆறுதல்படுத்தப்படுகிற பிள்ளைகளாக இருக்கிறோம்!

நாம் இவ்வாறு ஆசீர்வதிக்கப்பட்டுள்ளதால், "... [நாம்] 'அப்பா! பிதாவே!' என்று கூப்பிட கூடியவர்களாக இருக்கிறோம்" (8:15ஆ). "அப்பா" என்பது "தந்தை" என்று அர்த்தப்படும் அரமாயிக் வார்த்தையாக உள்ளது, ஆனால் அது அதைவிட அதிகமான அர்த்தம் தருவதாகவும் உள்ளது. அது "தந்தை" என்பதற்கான ஒரு *குழந்தையின்* வார்த்தையாக, "அப்பா" அல்லது "பப்பா" என்பதைப் போன்றதாக உள்ளது.[17] பெரும்பான்மையான யூதர்கள் தேவனை விளிப்பதில் இந்த மிகநெருக்கமான வார்த்தையை பயன் படுத்தியதில்லை, ஆனால் இயேசு இவ்வார்த்தையைப் பயன்படுத்தினார். கெத்செமெனே தோட்டத்தில் அவர் "அப்பா பிதாவே, எல்லாம் உம்மாலே கூடும்; இந்தப் பாத்திரத்தை என்னிடத்திலிருந்து எடுத்துப்போடும், ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" என்று கதறினார் (மாற்கு 14:36).

கிறிஸ் புல்லர்டு என்பவர், பழைய எருசலேம் நகரத்தின் பெருங்கூட்ட

மான சந்தையிடங்களினூடே நடந்து செல்லுதல் மற்றும் அங்குள்ள குழந்தைகள் விரித்த கைகளுடன் தங்கள் தந்தையர்களிடத்தில், "அப்பா! அப்பா!" என்று கூவுதலைக் கேட்டல் பற்றிக் கூறினார்.[18] அப்படிப்பட்ட கூவுதலில் மிகவும் அதிகமானவை உள்ளடக்கப்படக் கூடும்: "நான் களைப்பாயிருக்கிறேன், அப்பா; என்னைப் பிடித்துக்கொள்ளுங்கள்!"; "நான் கூச்சலிடும் கூட்டத்தைக் கண்டு பயந்திருக்கிறேன்; என்னைப் பிடித்துக்கொள்ளுங்கள், அப்பா!"; "எனக்கு உதவுங்கள், அப்பா, எனக்கு உதவுங்கள்!" "அப்பா" என்ற வார்த்தையானது தேவனுடனான நமது தந்தை/பிள்ளை உறவிற்கு அழகுமிக்க சொல்விளக்கமாக உள்ளது.

## செயல்முறை

நாம் எந்த வழிமுறைகளினால் தேவனுடைய பிள்ளைகள் ஆகிறோம்? பவுல், நாம் "புத்திரசுவிகாரத்தின்[19] ஆவியைப் பெற்[றோம்]" என்று கூறினார் (ரோமர் 8:15ஆ). வேறொரு இடத்தில் வேதாகமம், நாம் ஆவிக்குரிய *பிறப்பினால்* தேவனுடைய பிள்ளைகள் ஆகிறோம் என்று போதிக்கிறது யோவான் 3:3, 5; 1 பேதுரு 1:22, 23; 1 யோவான் 2:29; 3:9; 4:7; 5:1, 4, 18ஐக் காணவும்), ஆனால் சிலவேளைகளில் பவுல் *சுவிகாரத்தின்* ஒப்புவமையைப் பயன்படுத்தினார் (கலாத்தியர் 4:4; எபேசியர் 1:6ஐக் காணவும்). இவ்விரண்டு ஒப்புவமைகளும் ஒரே விஷயத்தைக் கண்ணோக்குகிற, சற்றே மாறுபட்ட வழிகளாக உள்ளது: அது தேவனுடைய பிள்ளையாகும் வழிமுறை என்பதாகும். ஒவ்வொரு ஒப்புவமையும் அந்தச் செயல்முறையின் மாறுபட்ட அம்சத்தை வலியுறுத்துகிறது.

"சுவிகாரம்" என்பது *huiothesia* என்ற கூட்டுவார்த்தையிலிருந்து வந்துள்ளது, இவ்வார்த்தை *huios* ("மகன்") என்பதை *thesis* ("இடுதல்") என்ற வார்த்தையுடன் இணைத்துப் பெற்றதாக உள்ளது. இது தனி நபர் ஒருவர் பிறப்பினால் தனது பெற்றோருக்குரியவராக இல்லா திருந்தபோதிலும், அவருக்கு மகனுக்குரிய (பிள்ளைக்குரிய) இடம், தகுதிநிலை மற்றும் சிலாக்கியத்தை அளித்தல் என்ற விஷயத்தைக் குறிக்கிறது.[20] நாம் அறிந்த வரையில், சுவிகாரம் என்பது யூதர்களின் மத்தியில் நடைமுறைப் படுத்தப்படவில்லை, ஆனால் மற்ற சமூகங்களில் அது பொதுவான விஷய மாக இருந்தது. F. F. புரூஸ் என்பவர், "கி.பி. முதல் நூற்றாண்டின் ரோம உலகத்தில், சுவிகரிக்கப்பட்ட ஒரு மகன், தனது சுவிகாரத் தந்தையி னால் அவரது பெயரை நிறைவுசெய்யும்படியும் அவரது உடமை களுக்கு வாரிசாகவும் கருத்தூன்றித் தேர்ந்துகொள்ளப்பட்டவராகவும் இருந்தார்" என்று எழுதினார்.[21] தேவன் ஒரே ஒரு "இயல்பான" மகனைக் கொண்டுள்ளார் என்றும் எஞ்சியுள்ள நாம் அனைவரும் சுவிகா ரத்தின் மூலமாகவே அவருக்கு பிள்ளைகள் ஆனோம் என்றும் கூறப்படுவ துண்டு.[22]

சுவிகாரத்தைப் பற்றிய, பெற்றோர்கள் தங்கள் சொந்தக்குழந்தையாக அன்பு காண்பித்து போஷிப்பதற்கென்று ஒரு பிள்ளையைத் *தேர்ந்துகொள்ளுதல்* பற்றிய விசேஷித்த சிலவிஷயங்கள் உள்ளன. எனது மகள் ஆஞ்சியும் அவளது கணவர் டேன்னும், கொரிய நாட்டைச் சேர்ந்த ஒரு சிறுபையனைச் சுவிகாரம் செய்துகொண்டதிலிருந்து, இந்தச் செயல்முறையை நான் இன்னும் அதிக மாகச் சரியாய் மதிக்க வந்தேன்: அந்தப் பையன் பெயர் எலியா ரே லவ்ஜாய்

என்பதாகும். அவன் சுவிகாரம் செய்யப்பட்டது பற்றி அவனுக்குக் கூறுவதற்கு ஆஞ்சி, *எலியாவின் வரலாறு* என்று அழைக்கப்படுகிற, படங்கள் அடங்கிய புத்தகம் ஒன்றைக் கொண்டிருந்தாள், அதில் அவனது வரலாறு அச்சிடப்பட்டு இருந்தது.[23] அந்தப் புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்ட சிறு முக்கிய குறிப்புகள் கீழே தரப்படுகின்றன:

> உன்னைப் பெற்றுக்கொள்ளும் வேளை வரவிருந்தபோது, நாங்கள் ஒரு பெரிய விமானத்தில் ஏறினோம். ஆக்லஹாமாவிலிருந்து கொரியா மிகவும் நீண்ட தூரத்திலிருந்தது! நாங்கள் அந்த விமானத்தில் நீண்ட, நீண்ட நேர மாக இருந்தோம். அந்த விமானத்தில் ஏராளமான மக்கள் தூங்கிக் கொண் டிருந்தார்கள்; ஆனால் நாங்கள் தூங்கவே முடியாத அளவுக்கு மன எழுச்சி யுடன் இருந்தோம்!
>
> நாங்கள் கொரியா வந்து சேர்ந்த பின்பு, உன்னை நாங்கள் முதன்முறை யாகப் பார்த்தோம். உன்னை நாங்கள் முதன்முறையாகப் பார்த்தபோது ..., நீ மிகவும் வளைந்து நெளிந்துகொண்டு சந்தோஷமாக இருந்தாய். நீ எங்களைப் பார்த்து ஒரு பெரிய, ஆச்சரியமான எலியா புன்னகை சிந்தினாய், உன்னை நாங்கள் மிகவும் அதிகமாய் அன்புகூர்ந்தோம்! ...
>
> உனக்குப் பெற்றோராயிருப்பதென்பது எங்களுக்குப் பெரிய ஆசீர் வாதம் என்பதை நாங்கள் அறிந்தோம். உன்னை நாங்கள், "கர்த்தரே தேவன்!" என்று அர்த்தப்படும் வகையில் எலியா என்று அழைத்தோம். நீ தேவனுக்கு ஒரு இனிய குழந்தையாகப் பிறந்தாய், அவர் உன் வாழ்வை ஆசீர்வதிக்க வேண்டும் என்று நாங்கள் ஜெபிக்கிறோம்.

ஆஞ்சியும் டேன்னும் எலியாவைத் தேர்ந்துகொண்டனர் - மற்றும் தேவன் நம்மைத் தேர்ந்துகொண்டார்,[24] அவர் தமது குடும்பத்தில் நம்மைச் சுவிகரித்துக் கொண்டார்! பிலிப்ஸ் என்பவரின் பொழிப்புரை வேதாகமம், (we "have been adopted into the very family circle of God") நாம் "தேவனுடைய சொந்தக் குடும்ப வட்டாரத்திற்குள்ளாகச் சுவிகரிக்கப்பட்டுள்ளோம்" என்று கூறுகிறது. அந்த உண்மையைச் சுவைத்துப் பார்க்கச் சற்றுநேரம் எடுத்துக்கொள்ளுங்கள்.

நாம் சுவிகரிக்கப்பட்ட விஷயமானது, நமது வாழ்வு மற்றும் நடவடிக்கை ஆகியவற்றில் செயல்விளைவை ஏற்படுத்த வேண்டும். இவ்வாறாக, NLT வேதாகமத்தில், ["You should *behave* ... like God's very own children, adopted into his family" (emphasis mine).] "நீங்கள் தேவனுடைய சொந்தப் பிள்ளைகளாக, அவருடைய குடும்பத்தில் சுவிகரிக்கப்பட்டவர்களாக நடந்துகொள்ள வேண்டும்" என்றுள்ளது.

### நிரூபணம்

இது புரிந்து உணர்ந்துகொள்ள மிகவும் மன எழுச்சி தருவதாக உள்ளது, ஆனால் உண்மையிலேயே நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கிறோம் என்பதை நாம் *அறிந்துகொள்வது* எவ்வாறு? நிரூபணத்தைக் கொடுக்கப் பவுல் தொடர்ந்து செயல்பட்டு, ரோமருக்கு எழுதிய நிருபத்தில் அடிக்கடி பயன்படுத்தப்படும் நீதிமன்ற அறையின் மொழிநடைக்குத் திரும்பினார்: "நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர் தாமே[25] நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சிகொடுக்கிறார்" (ரோமர் 8:16).

இது "நம்முடைய ஆவியுடனேகூட" என்று மொழிபெயர்க்கப்பட வேண்டுமா அல்லது "நம்முடைய ஆவிக்கு" என்று மொழிபெயர்க்கப்பட வேண்டுமா என்பது பற்றி கல்வியாளர்கள் மத்தியில் கலந்துரையாடல்கள் சில உள்ளன, ஆனால் "நம்முடைய ஆவியுடனேகூட" என்பது இவ்வசனத்தை வாசிப்பதற்கு மிகவும் இயல்பான வழியாக உள்ளது: "உடனேகூட சாட்சியிடுகிறார்" என்பது, "சாட்சியிடுதல்" என்பதற்கான *martureo* என்ற வார்த்தையை "உடன்" என்பதற்கான *sun* என்ற முன்னிடைச் சொல்லுடன் இணைப்பதால் வருகிற *summartureo* என்ற வார்த்தையிலிருந்து வருகிறது.

"இரண்டு அல்லது மூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே" ஒரு உண்மை நிலைவரப்படலாம் என்று வேதாகமம் போதிக்கிறது (மத்தேயு 18:16; உபாகமம் 17:6; 19:15; யோவான் 8:17 ஆகிய வசனங்களைக் காணவும்). நீங்கள் தேவனுடைய பிள்ளையாக இருக்கிறீர்கள் என்பதற்கு இரு சாட்சிகள் உள்ளனர் என்று பவுல் செயல்விளைவில் கூறினார்: பரிசுத்த ஆவியானவரும் உங்கள் ஆவியும். NCV வேதாகமத்தில், "the Spirit himself joins with our spirits to say we are God's children" ["நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கிறோம் என்பதற்கு ஆவியானவர் நமது ஆவியுடனே ஒன்றிணைந்து சாட்சியமளிக்கிறார்"] என்றுள்ளது. JB வேதாகமத்தில், "The Spirit himself and our spirit bear united witness that we are children of God" ("நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம் என்று ஆவியானவர் தாமும் நமது ஆவியும் இணைவாக சாட்சியமளிக்கின்றனர்") என்றுள்ளது.

சில எழுத்தாளர்கள், ஆவியானவரின் சாட்சியத்தைப் பற்றி விளக்கம் தரும்போது, "பரிசுத்த ஆவியானவர் உங்கள் இருதயங்களுக்குக் கொண்டுவருகிற உறுதிப்பாட்டின் உணர்வு" என்பதைப் பற்றிப் பேசுகின்றனர். அப்படிப்பட்ட விளக்கமானது குறைந்தபட்சம் நான்கு தவறுகளைக் கொண்டுள்ளது. முதலாவது, அது நமது *ஆவிகளுடனான* சாட்சியமாயிராமல், நமது *ஆவிக்குச்* சாட்சியமாக இருக்கும். இரண்டாவது, (ஏற்கனவே குறிப்பிட்டபடி) உணர்வுகள் அலைபாய்பவைகளாகவும் இயல்பில் நம்பத் தகுதியற்றவைகளாகவும் உள்ளன, அது ஆவியானவருடைய சாட்சியத்தை நம்பத்தக்கதற்கும் குறைவானதாக்கும். மூன்றாவது, "உணர்வு - சாட்சியம்" என்பதில் நம்பிக்கை உள்ளவர்களும்கூட, தேவனுடைய உண்மையான பிள்ளை ஒவ்வொருவரும் "உணர்வின்" இவ்வகையை உடமையாகக் கொண்டுள்ளனர் என்று உரிமைகோரமாட்டார். இருப்பினும், ஆவியானவரின் சாட்சி *ஒவ்வொரு* பிள்ளைக்குமானதாக உள்ளது. இவ்வாறாக, சாட்சி என்பது எதுவாக இருந்தாலும், அது வெறும் உள்ளான உணர்வாக மாத்திரம் இருப்பதில்லை. நான்காவது, பவுல் இப்படிப்பட்ட விளக்கத்தைத் தமது சிந்தையில் கொண்டிருந்தார் என்பதற்கு வேதவசனத்திலோ அல்லது சந்தர்ப்பப்பொருளிலோ குறிப்பு எதுவும் இருப்பதில்லை. ஆவியானவரின் சாட்சிக்கு இந்த அணுகுமுறையானது, வசனம்பற்றி கவனமான பொருள்விளக்கம் என்பதைக் காட்டிலும் அதிகமாக விளக்கவுரையாளரின் உபதேசரீதியான ஒருசார்பான எண்ணத்தின் பிரதிபலிப்பாகவே உள்ளது.

16ம் வசனம் அதற்கு முந்திய வசனத்திலிருந்து தனியே பிரித்தெடுக்கப்படக் கூடாது. அப்போதுதான் பவுல், நாம் " 'அப்பா பிதாவே' என்று கூப்பிடப் பண்ணுகிற ஒரு ஆவியை" (பரிசுத்த ஆவியை?) பெற்றிருக்கிறோம் என்று கூறியிருந்தார் (வசனம் 15ஆ). 15 மற்றும் 16ம் வசனங்களுக்கிடையிலான

நெருங்கிய பிணைப்பு NEB வேதாகமத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது, அது ["Spirit ... makes us sons, enabling us to cry 'Abba! Father!' *In that cry* the Spirit of God joins with our spirit in testifying that we are God's children"] *"ஆவியானவர், நாம் 'அப்பா! பிதாவே!' என்று கூப்பிடக் கூடும்படிக்கு நம்மைப் பிள்ளைகளாக்குகிறார். அந்தக் கூப்பிடுதலில் தேவனுடைய ஆவியானவர் நாம் தேவனுடைய பிள்ளைகளென்று சாட்சியிடுதலில் நம்முடைய ஆவிகளுடனே சேர்ந்துகொள்கிறார்" (வசனங்கள் 15, 16;* RSV *வேதாகமத்தில், காணவும்). ரோமர் 8:15, 16க்கு இணைவசனமாக இருப்பது கலாத்தியர் 4:6 ஆகும்: "மேலும் நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால், 'அப்பா! பிதாவே! என்று கூப்பிடத்தக்கதாகத் தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார்." கலாத்தியர் 4:6ல் பரிசுத்த ஆவியானவர் "அப்பா! பிதாவே!" என்று கூப்பிடுகையில், ரோமர் 8:15ல் நமது ஆவி "அப்பா, பிதாவே!" என்று கூப்பிடுகிறது என்பதைக் கவனியுங்கள். இது ஒரு இருமடங்கு சாட்சியமாக உள்ளது. நமது ஆவிகள், "தேவன் நமது அப்பாவாக, நமது தந்தையாக இருக்கிறார்!" என்று சாட்சியிடுகின்றன மற்றும் ஆவியானவரும்கூட, "ஆம், அது சரியானதே! தேவன் அவர்களுக்குப் பிதாவாகவே இருக்கிறார்!" என்று ஒத்திசைவாகக் கூறுகிறார்!*

*இந்த சத்தியத்தைப் பரிசுத்த ஆவியானவர் எப்போது சாட்சியளித்தார்? அவர் வசனத்தை ஏவியபோது இதைச் செய்தார். கொரிந்தியருக்கு எழுதியதில் பவுல், தாம் பேசிய வசனங்கள் "ஆவியானவராலே போதிக்கப்பட்டவை" என்று வலியுறுத்தினார் (1 கொரிந்தியர் 2:13). கீழ்ப்படிதலுள்ள விசுவாசத்தின் மூலமாகத் தேவனுடைய கிருபையை நாம் நமக்கு ஏற்புடையதாக்கிக் கொள்ளும்போது, நாம் தேவனுடைய குடும்பத்தின் அங்கமாகிறோம் என்று ஆவியானவர் புதிய ஏற்பாட்டில் சாட்சியம் தந்தார். ஆவியானவரின் சாட்சியத்தைக் கவனமாகக் கேளுங்கள்: "நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே" (கலாத்தியர் 3:26, 27).*

*யாரேனும் ஒருவர், "வேதவசனங்கள் ஆவியானவருடைய 'சாட்சியம்' என்று அழைக்கப்படக்கூடும் என்பதில் நீங்கள் உறுதியாயிருக்கிறீர்களா?" என்று கேட்கலாம், எபிரெயர் 10ஐக் கண்ணோக்குங்கள், அதில் "... பரிசுத்த ஆவியானவரும் நமக்குச் சாட்சிசொல்லுகிறார்; ..." என்றுள்ளது (வசனம் 15). அதை ஆவியானவர் எவ்வாறு செய்கிறார்? அந்த எழுத்தாளர் பின்வருமாறு தொடர்ந்தார்,*

> *அந்த நாட்களுக்குப் பின்பு "நான் அவர்களோடே பண்ணும் உடன்படிக்கையாவது: நான் என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய இருதயங்களில் வைத்து, அவைகளை அவர்களுடைய மனதில் எழுதுவேன்" என்று கர்த்தர் சொல்லுகிறாரென்பதை உரைத்தபின்பு, "அவர்களுடைய பாவங்களையும் அவர்களுடைய அக்கிரமங்களையும் நான் இனி நினைப்பதில்லை" என்பதை* [Holy Spirit] *சொல்லுகிறார் (வசனங்கள் 16, 17).*

*பரிசுத்த ஆவியானவரால் ஏவுதல் செய்யப்பட்ட எரேமியா 31:33, 34 லிருந்து*

அந்த மேற்கோள் வந்தது (2 பேதுரு 1:21ஐக் காணவும்). ஜிம் மெக்கைகன் என்பவர் பின்வருமாறு எழுதினார்,

> அனுபவங்களின் உணர்வை ஏற்படுத்தும் வேதவசனத்தின்மீது மக்கள் தங்கள் உறுதிப்பாட்டை ஏற்படுத்துதல் என்பது அவர்களுக்கு மிகவும் முக்கிய மானதாக உள்ளது. நாம் அனுபவத்தை இரட்சிப்பின் அடிப்படையாகவும் தளமாகவும் ஏற்படுத்துகிறபோது, வண்டியை குதிரைக்கு முன்னால் வைப்பவர்களாக இருக்கிறோம்.
>
> … ஆவியானவர் வேதாகமத்தில் சாட்சியம் கொடுத்திருக்கிறார். அவ்விஷயத்தில் பிரதானமாகச் செயல்படுவோம். நாம், வேதாகமத்திற்கு நமது அனுபவங்களின் அடிப்படையில் அல்ல, ஆனால் நமது அனுபவங் களுக்கு வேதாகமத்தின் அடிப்படையில் விளக்கம் தருவோமாக.[26]

முன்னோடிப் பிரசங்கியார்கள், ரோமர் 8:16ன்மீது போதிக்கும்போது, அவர்கள் அடிக்கடி ஒரு நீதிமன்ற அறையைச் சித்தரித்தனர். அவர்களின் விவரிப்பில், அவர்கள் முதலில் பரிசுத்த ஆவியானவரை ஒரு சாட்சியாக அழைப்பார்கள். ஆவியானவர் "நீங்கள் இயேசுவை விசுவாசித்து அவரது சித்தத்தைச் செய்தால் நீங்கள் தேவனுடைய பிள்ளையாக இருப்பீர்கள்" என்று கூறுவதாகக் கற்பனை செய்துகொள்ளுங்கள். அவர்கள் அதை நிலைநாட்டும் புதிய ஏற்பாட்டு வசனங்களை மேற்கோள் காண்பிப்பார்கள். பின்பு, அவர்கள் தங்களின் விவரிப்பில், கற்பனையான ஒரு கிறிஸ்தவரை கூண்டிற்கு அழைத்து, அவர் இவ்விதமாக சாட்சி கூறும்படி செய்வார்கள்: "ஆவியானவர் கூறுவதை நான் *செய்துள்ளேன்,* எனவே *நான்* தேவனுடைய பிள்ளையாக இருக்கிறேன்!" இந்த அணுகுமுறையை, எளிமைப்படுத்தப்பட்ட அணுகுமுறை என்று சிலர் அழைக்கலாம், ஆனால் இது பரிசுத்த ஆவியானவர் எவ்வாறு மனிதர்களின் ஆவி*யுடன்* சாட்சியளிக்கக்கூடும் என்பதை விவரிக்கிறது.

நாம் தேவனுடைய பிள்ளையாக இருக்கிறோம் என்பதை நம்மால் *அறிய* முடியுமா? நெருப்பு சூடாக இருக்கிறது மற்றும் பனிக்கட்டி குளிர்ச்சியாக இருக்கிறது என்று நாம் அறியும் அந்த கருத்தில் அல்ல.[27] பவுல், "நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம்" என்று கூறினார் (2 கொரிந்தியர் 5:7) - மற்றும் நாம், "சுவைத்தல், முகருதல் அல்லது உணருதல் என்பவற்றால் அல்ல" என்றும் கூடுதலாகக் கூறமுடியும். இருந்தபோதிலும், நாம் தேவனுக்குப் பிரிய மானவர்களாக இருக்கிறோம் என்பதை நாம் அறியக்கூடிய ஒரு கருத்துணர்வு உள்ளது. யோவான், "உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று நீங்கள் அறியவும், … உங்களுக்கு இவைகளை எழுதியிருக்கிறேன்" என்று கூறினார் (1 யோவான் 5:13). எனது ஆசிரியர், J. D. தாமஸ் என்பவர், "நாம் தேவனுடைய பிள்ளையாக இருக்கிறோம் என்பதை *நாம் எழுத்தில் கொண்டிருக்கிறோம்* என்பது ஆச்சரியம் நிறைந்ததல்லவா?" என்று கூறினார்.[28]

## தேவனுடைய சுதந்தரர்கள் (8:17)

**ஒரு சிலாக்கியம்**

நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கிறோம் என்பதற்கு நிரூப

ணத்தை முன்வைத்துள்ள நிலையில் பவுல், "நாம் பிள்ளைகளானால் சுதந் தரருமாமே" என்று கூறினார் (வசனம் 17அ). "தேவனுக்குச் சுதந்தரர்களா"? அந்தச் சிந்தனையே கற்பனையைத் தள்ளாடச்செய்கிறது. பல ஆண்டுகளுக்கு முன்னர், பிலதெல்பியாவைச் சேர்ந்த ஹென்ரிட்டா கேர்ரட் என்ற மூதாட்டி, இறந்துபோனார்கள். சுமார் பன்னிரெண்டு பேர் மாத்திரமே அப்பெண் மணியின் சவ அடக்கத்தில் கலந்துகொண்டனர் - ஆனால் பிற்பாடு, புரோபேட் நீதிமன்றம், பிள்ளைகள் இல்லாத இப்பெண்மணி, எண்பத்தி ஐந்துகோடி ரூபாய் மதிப்புள்ள சொத்தை விட்டுச் சென்றதாக அறிவித்தது. உடனே, ஒவ்வொருவரும் அவளது வாரிசாக இருக்க விரும்பினர். பல ஆண்டுகளுக்குப் பின்பு, இன்னமும் அவர்கள் சட்டச் சிக்கல்களை அறுத்து நீக்கி வகைப்படுத்த நாடினர். அந்தச் சொத்து நூற்றுப்பதினைந்து கோடி ரூபாய் அளவுக்கு வளர்ந்து இருந்தது, 26,000 பேர் அந்தப் பெண்மணியின் வாரிசு என்று உரிமைகோரினர்![29] ஹென்ரிட்டா கேர்ரட்டின் வாரிசாக இருத்தல் மிகவும் நன்றாக இருக்கும் - ஆனால் *தேவனு டைய* வாரிசாக/சுதந்தரராக இருக்கிறோம் என்பது இன்னும் எவ்வளவு அதிகம் மெய்சிலிர்க்கும் அனுபவமாயிருக்கிறது!

தேவனுடைய உண்மைநிறைந்த பிள்ளைகளுக்குக் காத்திருக்கும் சுதந்தரத்தைப் பற்றிப் பேதுரு குறிப்பிட்டார். அவர் அதை, "அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தர[ம்]" என்று அழைத்தார் (1 பேதுரு 1:4). R. C. பெல் என்பவர், தூதர்கள் ஒருக்காலும் "தேவனுடைய சுதந்தரர்கள்" என்று அழைக்கப்படவில்லை, மனிதர்கள் மட்டுமே அவ்வாறு அழைக்கப்பட்டனர் என்று உற்றுநோக்கியுள்ளார். அவர், "நாம் நமது சுதந்தரத்தைப் பற்றி ஏன் இவ்வளவு குறைவான மன எழுச்சியுள்ளவர்களாக இருக்கிறோம்?" என்று ஆச்சரியப்பட்டார்.[30]

"சுதந்தரர்" என்ற வார்த்தை, நாம் நமது இரட்சிப்பை ஈட்டவில்லை, ஆனால் கிருபையினால் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்பதைத் திரும்பவும் ஒருமுறை வலியுறுத்துகிறது.[31] நீங்கள் யாருக்கேனும் வேலைசெய்துகொண்டிருந்தால், உங்கள் ஊதியத்தை நீங்கள் "சுதந்தரம்" என்று அழைக்கமாட்டீர்கள். வேலைசெய்தல் அல்லது வர்த்தகம் அல்லது ஒரு சேவை அளித்தல் என்பவற்றி னால் ஈட்டப்படும் பணம் சுதந்தரம் என்பதாக இருப்பதில்லை. சுதந்தரம் என்பது இன்னொருவரின் முயற்சியினாலே ஈட்டப்பட்டு, வாரிசுதாரருக்குக் கொடுக்கப்படும் பொருளாக உள்ளது. அதுபோலவே, நமது நித்திய சுதந்தரம் இயேசுவினால் "ஈட்டப்"பட்டுள்ளது, அது நமக்கு "தரப்படும்"! ஆச்சரியமான கிருபை!

மகன் என்ற உரிமையின் ஆசீர்வாதங்களைப் பற்றிக் கூறுவதில் திகைப்படை வதுடன் பவுல் முடித்து விடாதிருந்தார். கூடுதலாக அவர், "கிறிஸ்துவுக்கு உடன்சுதந்தரருமாமே" என்றும் கூறினார் (ரோமர் 8:17ஆ). 8:29ல் கிறிஸ்து, "அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவர்" என்று அழைக்கப்பட்டுள்ளார். தேவனுடைய குடும்பத்தைக் குறிப்பிடுவதில், கிறிஸ்து நமது ஆவிக்குரிய "மூத்த சகோதரர்" என்று நாம் நினைக்கலாம்.[32] 17ம் வசனத்தில் பவுல், நாம் நமது மூத்த சகோதரருடன் "உடன் சுதந்தரராக" இருக்கிறோம் என்று கூறினார்! "உடன் சுதந்தரர்" என்பது, "சுதந்தரர்" என்பதற்கான வார்த்தையாகிய *kleronomos* என்பதுடன் "உடன்" என்ற முன்னிடைச் சொல்லுக்குரிய வார்த்தையான *sun* என்பதை இணைத்துப் பெறப்பட்ட *sunkleronomos* என்ற வார்த்தையிலிருந்து

மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

ஒரு கணம், கிறிஸ்து தமது பிதாவினிடத்தில் திரும்பிச் சென்றபோது பெற்றுக்கொண்ட மகிமை மற்றும் கனத்தைக் கற்பனை செய்து பாருங்கள். இல்லை, நாம் அதைப் புரிந்துணர இயலாது - ஆனால் முயற்சி செய்துபாருங்கள். எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், "தமக்கு முன்வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு" இயேசு சிலுவையைச் சகிக்க முடிந்தது என்று கூறினார் (எபிரெயர் 12:2). கிறிஸ்து "மகிமையில் எடுத்துக்கொள்ளப்பட்டார்" என்று பவுல் கூறினார் (1 தீமோத்தேயு 3:16). நீங்களும் நானும் அந்த மகிமையில் பங்கடைவோம்! ரோமர் 8:17ன் முடிவில் பவுல், "அவரோடு [நாம்] மகிமைப்படுதல்" பற்றிப் பேசினார். 18ம் வசனத்தில் அவர், "நமக்கு வெளிப்படுத்தப்படவிருக்கும் மகிமை" பற்றிக் குறிப்பிட்டார். 30ம் வசனத்தில், எதிர்காலத்தை முன் எதிர்நோக்கிய நிலையில் அவர், தேவன் எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை "மகிமைப்படுத்தியுமிருக்கிறார்" என்றும் கூறினார்.

இயேசு உரிமையினால் தமது சுதந்தரத்தைப் பெற்றார், அதேவேளையில் நாம் நம்முடையதைக் கிருபையினால் பெறுகிறோம் என்பதைச் சிந்தையில் வைத்துக்கொள்ளுங்கள். அதை அவர் பெற்றுக்கொள்ளத் தகுதியானவராக இருக்கிறார்; நாம் அவ்வாறில்லை. வளர்ந்த பிள்ளைகள் சொத்துக்காகச் சண்டையிட்டுக் கொள்வதை நான் பார்த்திருக்கிறேன், அவர்கள் ஒவ்வொருவரும் தமது பங்கையும் ... அதற்கு அதிகமானவற்றையும் பெற்றுக்கொள்ள முயற்சி செய்வதுண்டு. அது ஒரு இழிவான காட்சியாக இருக்கிறது. இயேசு அப்படிப்பட்டவராக இல்லை. அவர் ஒருவரே சுதந்தரத்தில் உண்மையான உரிமையுள்ளவராக இருக்கிறார், ஆனால் அவர் அதைத் தமது சகோதர சகோதரிகளுடன் சந்தோஷமாய்ப் பகிர்ந்துகொள்வார்!

"கிறிஸ்துவுக்கு உடன்சுதந்தரராயிருத்தல்" என்பதினால் அர்த்தப்படுத்தப்படுவது என்ன என்பதை நான் மிகச்சரியாகப் புரிந்துகொள்கிறேனா? இல்லை, ஆனால் இதுவே விஷயமாக இருக்கும் என்பதை நான் விசுவாசத்தினால் ஏற்றுக்கொள்கிறேன் - மற்றும் திகைக்கச் செய்யும் இந்த சிலாக்கியத்திற்காகத் தேவனுக்கு நான் நன்றி செலுத்துகிறேன்!

**ஒரு அளிப்பு**

இருப்பினும், இந்த சிலாக்கியத்திற்கு ஒரு அளிப்பு, சந்திக்கப்பட வேண்டிய நிபந்தனை ஒன்றுள்ளது. 17ம் வசனத்தில் பவுல், "கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும்" என்று முடித்தார் (வசனம் 17இ). நாம் கிறிஸ்துவுக்கு உடன்சுதந்தரராக இருக்க வேண்டும் என்றால், நாம் [அவர்] உடன் பாடுபடுபவர்களாகவும் இருக்க வேண்டும். புரூஸ் என்பவர், " 'இப்போது பாடுபடுதல், பிற்பாடு மகிமையடைதல்' என்பது புதிய ஏற்பாட்டில் திரும்பத் திரும்ப வருகிற ஒரு ஆய்வுக் கருத்தாக உள்ளது" என்று குறிப்பிட்டார்.[33] (யோவான் 15:20; 2 தீமோத்தேயு 2:12ஐக் காணவும்.) பிள்ளைகளுக்கான பாடல் ஒன்று பின்வரும் வார்த்தைகளைக் கொண்டுள்ளது: "நீ சிலுவையைச் சுமக்க இயலாவிட்டால், உன்னால் கிரீடத்தை அணிய இயலாது."[34] (மத்தேயு 16:24, 25ஐக் காணவும்.)

"நம்பிக்கையினால் வாழ்தல்" (ரோமர் 8:18) என்ற பாடத்தில் பாடநுபவித்தல் கலந்துரையாடப்பட்டுள்ளது. இப்போது, நான் மகிமை பற்றிய குறிப்பை

முக்கியத்துவப்படுத்த விரும்புகிறேன்: "மெய்யாகவே நாம் அவரோடுகூட பாடுபட்டால் ... நாம் அவரோடுகூட மகிமைப்படுத்தப்படுவோம்." J. D. தாமஸ் என்பவர், "இவ்வசனம் நம்மைக் கர்த்தருடனான நமது உறவின் உயரங்களுக்கு எடுத்துச் செல்லுகிறது" என்று எழுதினார்.[35]

## முடிவுரை

"... 'அப்பா! பிதாவே!' என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திரசுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள். நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சிகொடுக்கிறார். நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே" (ரோமர் 8:15ஆ-17அ). இது மன எழுச்சிக்குரிய விஷய மாக உள்ளது! நம்மில் சிலர் குறிப்பிட்ட சில மதக்குழுக்களின் உணர்வியத்தினால் மன வெறுப்படைந்திருக்கிறோம், ஆனால், அது கர்த்தருடனான நமது உறவில் உணர்வுக்கு இடமில்லை என்று அர்த்தப்படுவதில்லை. தேவன் நம்மீது மகன் என்ற உரிமையின் ஆசீர்வாதங்களை ஏராளமாகப் பொழிந்திருக்கிறார். அதற்காக நாம் அவருக்கு நன்றி செலுத்துவோமாக! அதற்காக நாம் அவரைத் துதிப் போமாக!

இந்தப் பாடத்தை நான் முடிக்கையில், "நீங்கள் தேவனுடைய பிள்ளையாக *இருக்கிறீர்களா?*" என்று கேட்க அனுமதியுங்கள். ஆவியானவரின் சாட்சியத்தை நினைவில் வையுங்கள்: "நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில் உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே" (கலாத்தியர் 3:26, 27). இயேசுவின்மீதும் அவருடைய பலியின்மீதும் நீங்கள் நம்பிக்கை வைத்திருக் கிறீர்களா? உங்கள் விசுவாசத்தை நீங்கள் வெளிப்படுத்தியிருக்கிறீர்களா? உங்கள் விசுவாசத்தின் வெளிப்பாடாக நீங்கள் ஞானஸ்நானத்தின் தண்ணீருக்குள் அடக்கம்பண்ணப்பட்டிருக்கிறீர்களா? நீங்கள் அவ்வாறு செய்திருக்காவிட்டால், உங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிய இன்றே பூரணமான வேளையாக இருக்கும்.

நீங்கள் ஞானஸ்நானம் பெற்றிருந்தால், நீங்கள் தேவனுடைய பிள்ளையைப் போல் *நடந்துகொள்கிறீர்களா?* உயர்நிலைப் பள்ளியில், எனது தந்தை எனது விவசாய ஆசிரியராகவும் FFA[36] ஆலோசகராகவும் இருந்தார். ஒவ்வொரு வசந்த காலத்திலும், அவர் தமது மாணவர்கள், பல்வேறு போட்டிகளில் தங்களின் காட்சி மிருகங்களைப் பிரவேசிக்க வைப்பதற்காக, ஆக்லஹாமா நகரத்தின் மாகாணக் கண்காட்சிக்கு அழைத்துச் செல்வார். அவர் எங்களை வாரத்தின் முதலில் அழைத்துச் சென்று, எங்கள் மிருகங்களைப் பராமரிக்கும் படி எங்களை விட்டுவிடுவார், பின்பு வாரத்தின் பிற்பகுதியில் அவர் திரும்பி வந்துசேருவார், அது போட்டிகளுக்கான வேளையாக இருக்கும். கண்காட்சி மைதானத்தில் முதன்முறையாக அவர் என்னை விட்டுச் சென்றபோது, எனது FFA மேல்சட்டையிலிருந்த எனது பெயரை அவர் சுட்டிக்காண்பித்து, "அது எனது பெயராகவும் உள்ளது என்பதை நினைவில் வைத்துக்கொள்" என்று கூறினார்.[37] அவர் அர்த்தப்படுத்தியது என்ன என்பதை நான் புரிந்துகொண்டேன். அவர் சென்றுவிட்டிருந்தபோது, நான் சரியான முறையில் நடந்துகொள்ள வேண்டியவனாக இருந்தேன்.

*நான் ஏதேனும் தவறு செய்தால், அது அவர்மீதும் என்மீதும் மோசமான வகையில் பிரதிபலிக்கும். நீங்களும் நானும் தேவனுடைய மகன்களாகவும் மகள்களாகவும் இருக்கிறோம். நாம் வாழவேண்டிய பிரகாரம் வாழாதபோது, அது நமது பிதாவைக் கனவீனப்படுத்துகிறது. நீங்கள், தேவனுடைய பிள்ளை நடக்கவேண்டிய மற்றும் பேசவேண்டிய பிரகாரம் இருக்கத் தவறியிருந்து, தேவனைக் கனவீனப்படுத்தி இருக்கிறீர்களா? அப்படியென்றால், கடந்தகாலத்தி லுள்ள பிரச்சனைகளைப் பற்றி இன்றைக்கே அக்கறை கொள்ளும்படி நான் உங்களை ஊக்கப்படுத்துகிறேன் (நடபடிகள் 8:22; 1 யோவான் 1:9; யாக்கோபு 5:16) அதன்மூலம் நீங்கள் மகன் என்ற உரிமையின் ஆசீர்வாதத்தைத் திரும்பவும் மகிழ்வுடன் அனுபவிக்கக் கூடும்!*

---

குறிப்புகள்

[1]*"பிள்ளைகள்" என்பதற்கான கிரேக்க வார்த்தை teknon என்பதன் பன்மைச் சொல் லாக உள்ளது.* [2]John R. W. Stott, *The Letters of John: An Introduction and Commentary* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988), 122. [3]J. W. Roberts, *The Letters of John,* The Living Word Commentary (Austin, Tex.: R. B. Sweet Co., 1968), 76. [4]Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary,* vol. 2 (Wheaton, Ill.: Victor Books, 1989), 504. [5]John R. W. Stott, *The Message of Romans: God's Good News for the World,* The Bible Speaks Today series (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1994), 230. [6]*"நடத்தப்படுதல்" என்பது ago என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.* [7]Douglas J. Moo, *Romans,* The NIV Application Commentary (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 2000), 260. [8]J. H. Gilmore, "He Leadeth Me," *Songs of Faith and Praise,* comp. and ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1994). [9]J. D. Thomas, Class Notes, *Romans,* Abilene Christian College (1955). [10]*இந்தப் புத்தகத்தின் பின்பகுதியில் காணப்படும் "உதவி தேவையா? (8:26-28)" மற்றும் "தேவனுடைய அருளிரக்கம் (8:28)" என்ற பாடங்களைக் காணவும்.*

[11]*இவ்விடத்தில் "புத்திரர்கள்" என்ற வார்த்தையைப் பயன்படுத்தப் பவுல் பல காரணங்களில் ஏதாவது ஒன்றைக் கொண்டிருக்கலாம். ஒருவேளை அவரது நாட்களில் ஒரு மகளைக் காட்டிலும் ஒரு மகன் வாரிசாவது அதிகமாயிருந்தது என்பதால் இவ்வாறு இருக்கலாம். ஒருவேளை, நாம் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவுடன் நம்மை அடையாளப்படுத்திக்கொள்ள உதவுவதற்காகப் பவுல் இந்தச் சொற்றொடரைப் பயன்படுத்தியிருக்கலாம் (ரோமர் 8:17ஐக் காணவும்).* [12]Adapted from David F. Burgess, comp., *Encyclopedia of Sermon Illustrations* (St. Louis: Concordia Publishing House, 1988), 131. [13]*"திரும்பவும்" என்ற வார்த்தையானது, கடந்தகாலத்தில் அவர்கள் பாவத்தினிமித்த மாகவும், தேவனுடைய பிரமாணத்தைப் பூரணமாகக் கைக்கொள்ள இயலாததனாலும், பயத்திற்கு அடிமைகளாயிருந்தனர் என்று சுட்டிக்காண்பிக்கிறது. ஆவியானவர் அவர்களை, பயம் மேலோங்கியிருந்ததான நியாயப்பிரமாணம்/கிரியைகள் என்ற முறைமைக்குத் திரும்ப எடுத்துச் செல்லவில்லை, மாறாக, அவர்கள் கிருபை/விசுவாசம் என்ற முறைமையின்கீழ் தொடர்வார்கள்.* [14]Leon Morris, *The Epistle to the Romans* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988), 314. [15]*6ம் அதிகாரத்தில் பவுல் நாம் "நீதிக்கு அடிமைகளாக" இருப்பதாகக் கூறினார் (வசனம் 18), ஆனால் நாம் அடிமைகளின் "ஆவியை" (மனநிலைப்பாட்டை) கொண்டிருப்பதில்லை. நமது வெளிக்கண்ணோக்க மானது புத்திரர்களுடையதாக இருக்கிறது.* [16]Adapted from Jim Townsend, *Romans: Let Justice Roll* (Elgin, Ill.: David C. Cook Publishing Co., 1988), 67. [17]*உங்கள் சமூகத்தில் மிகச்சிறு பிள்ளைகள் "தந்தை" என்பதற்கு ஒரு மாறுபட்ட வார்த்தையைப் பயன்படுத்தினால்,*

"அப்பா" மற்றும் "ப்பா" என்பதற்குப் பதிலாக அவ்வார்த்தையை இவ்விடத்தில் பயன்படுத்துங்கள். [18]Chris R. Bullard, "No Condemnation, No Separation," sermon preached at Overland Park church of Christ, Overland, Kansas, 16 September 1990, cassette. [19]ஏதோ சில காரணங்களினால், NIV வேதாகமம் இவ்வசனத்திலுள்ள கிரேக்க வார்த்தையை "sonship" என்று மொழிபெயர்த்துள்ளது, ஆனால் 23ம் வசனத்தில் இதே வார்த்தையை "adoption as sons"என்று தரவழைத்துள்ளது. [20]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 13-14.

[21]F. F. Bruce, *The Letter of Paul to the Romans,* The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 157. [22]8:23ல், பவுல் நாம் இப்போது மகன் என்ற உரிமையின் சிலாக்கியங்களை மகிழ்வுடன் அனுபவித்தபோதிலும், "சுவிகரித்தல் என்ற செயல்முறை" கிறிஸ்து மறுபடியும் வரும்வரையில் நிறைவடையாது என்று சுட்டிக்காண்பித்தார். [23]The book was printed and bound for her by MyPublisher.com, 2004. [24]எபேசியர் 1:4; கொலோசெயர் 3:12; 2 தெசலோனிக்கேயர் 2:13; 2 தீமோத்தேயு 2:10; தீத்து 1:1; 1 பேதுரு 1:1 ஆகிய வசனங்களைக் காணவும். [25]KJV வேதாகமத்தில் "Himself" என்பதற்குப்பதிலாக "itself" என்றுள்ளது. ஆவியானவர் என்பதற்கான (*pneuma* என்ற) கிரேக்க வார்த்தை பாலற்றதாக இருப்பதால், "itself"என்பது தவறான மொழிபெயர்ப்பாக இருப்பதில்லை. இருப்பினும், "itself" என்ற வார்த்தை, பரிசுத்த ஆவியானவர் ஒரு *நபராக* இருக்கிறார் என்பதற்குப் பதிலாக அவர் ஒரு *பொருளாக* இருக்கிறார் என்ற மனப்பதிவை விட்டுச் செல்லக்கூடும், எனவே (NKJV யில் உள்ளபடி) "Himself" என்பதே விரும்பித் தேர்ந்துகொள்ளப்படுகிறது. [26]Jim McGuiggan, *The Book of Romans,* Looking Into The Bible Series (Lubbock, Tex.: Montex Publishing Co., 1982), 244-45. [27]அது "அனுபவ அடிப்படையிலான நிரூபணம்" என்று அழைக்கப்படுகிறது, அது ஐந்து புலன்களால் அனுபவிக்கப்பட முடியும். [28]Thomas. [29]Adapted from Halford E. Luccock, *Preaching Values in the Epistles of Paul*, vol. 1, *Romans and First Corinthians* (New York: Harper & Brothers, 1959), 55. [30]R. C. Bell, *Studies in Romans* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1957), 89.

[31]McGuiggan, 246. [32]நான் "மூத்த சகோதரன்" என்ற வார்த்தையை, நான் வளர்ந்துகொண்டிருந்த காலத்தில் அடிக்கடி கேட்டிருக்கிறேன். நான் பிரசங்கிக்கத் தொடங்கியபோது, மிகச் சரியான அந்தச் சொல்விளக்கத்தைப் புதிய ஏற்பாட்டில் வீணாகத் தேடினேன். அது ஒருவேளை ரோமர் 8:29ன் அடிப்படையில் இருந்தது. [33]Bruce, 150. [34]Author unknown (http:/ / www.wlcamp.org/songs.htm#Do%20Lord; Internet; accessed 20 February 2004). [35]J. D. Thomas, *Romans,* The Living Word series (Austin, Tex.: Sweet Publishing Co., 1965), 61. [36]Future Farmers of America அமெரிக்காவின் எதிர்கால விவசாயிகள் என்பது இளம் மக்களுக்குப் பண்ணை மற்றும் கால்நடைப் பராமரிப்பு பற்றிக் கற்பிக்கும் ஒரு நிறுவனமாகும். [37]எனது தந்தையும் நானும் எங்கள் பெயர்களில் "டேவிட்" என்பதைக் கொண்டிருக்கிறோம்.